## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு
## Uni5 பக்த விஜயம் - 38. ஸ்ரீமதி. சிளாபாய் அம்மையார்

---

**இல்லறத்தில் ஆன்மீகம்**

இக்காலத்தில் எதையுமே எடுத்தோமா - கவிழ்த்தோமா என்று வாழும் இளைஞர்களுக்கு இவர் வழிகாட்டி ஆவார்.மிகவும் ஆன்மீகத்தில் ஊறிப்போன குடும்பங்களில் கூட சற்று விவேகம் இல்லாமல் போவதால் குடும்ப வாழ்க்கை உடைந்து போவதைப் பார்க்கிறோம்.

அடியேனுக்குத் தெரிந்த ஒரு பக்தர் மிகவும் இஷ்டப்பட்டுக் கல்யாணம் செய்தார்.ஆனால் இரண்டு வாரத்துக்குள் அவரது துணை அவரது ஆன்மீகத்துக்கு ஒத்துழைக்கவில்லை என்று விவாகரத்து வாங்கிக் கொண்டார்.ஆனால் அவரது மனம் இல்லறத்தின் தோல்வியை ஏற்க முடியவில்லை.இது ஆன்மீகத்தில் பக்குவம் பெறாத தன் இஷ்ட நிலையைத் தான் காட்டுகிறது.

இல்லறத்தில் இருந்து கொண்டே பூரண ஆன்மீகத்தையும் பக்தியையும் தான் அனேக அன்பர்கள் போதிக்கிறார்கள். அதற்கு முதலில் தேவை - எதிர்பார்ப்புகள் அற்ற தூய அன்பு.இதன் மூலமே அனைவரையும் ஈர்க்க முடியும்.

விட்டுக்கொடுத்தலும், அன்பும், ஆன்மீகம் என்பது சதா ஒரு விக்ரஹத்தை பூஜிப்பதும் அல்ல.இதை எல்லாம் புரிந்து கொள்ளுதல் அவசியம். தொன்னுறு சதவீத அன்பர்கள் இல்லறத்தில் இருந்து கொண்டு தான் ஆன்மீகம் செய்தனர்.தம்பதியினர் மனம் ஒத்து ஆன்மீகம் செய்தால் புண்யம், இல்லையேல் கஷ்டம் தான்.ஆனாலும் அடக்கமும் அன்பும் விவேகமும் பக்தியும் ஏற்றுக்கொள்ளும் மனமும் அனைவரையும் மாற்றும்.இதற்கு ஓர் உதாரணம் தான் மஹாராணி சிளாபாய்.

குஜராத் பூமியை ஒரு காலத்தில் ஆண்ட அரசன் பாண்டே.அவனது ஒரே மகள் தான் சிளா பாய்.மிகச் சிறந்த குரு மூலம் அவளுக்கு அனைத்து வகைக் கல்வி கேள்விகளையும் அவன் அளித்து, நாட்டுக்கும் வீட்டுக்கும் உகந்த பெண்ணாய் வாழ வழிகாட்டினான்.

**தம்பதியினர் தம் பூரண பொறுமையைக் கொண்டே குடும்பத்தில் ஆன்மீகத்தை அறிமுகம் செய்ய முடியும்.**

**குரு தந்த சாளக்ராமம்**

சிளா பாயின் குரு தினமும் மிகவும் ஸ்ரத்தையுடன் சாளக்ராம பூஜை செய்பவர்.அதன் மூலம் அவர் ப்ரபஞ்ச தத்வத்தையும் ப்ரஹ்மத்தையும் தன்னுள் உணர்ந்தவர். இவரது தூய பக்தியையும் ஆன்மீகம் கலந்த வாழ்க்கைக் கல்வியையும் அப்படியே உள்வாங்கிக் கொண்ட சிளா பாய் அவர் மூலமே ஒரு சாளக்ராமம் பெற்றுக் கொண்டு அரண்மனை திரும்பினாள்.

**கல்யாணம் முடிந்த மறுநாள்**

சிளா பாயின் அழகையும் பண்பையும் கல்சியையும் ஆன்மீகத்தையும் உணர்ந்த வேற்று தேச அரச குடும்பம் முறைப்படி அவரைத் தம் வாரிசுக்கு மணம் செய்த பின் தம் தேசத்து அழைத்துச் செல்கிறது.அழகிய பயணம் அது.

பயணம் தொடங்கி மறுநாள் விடியலில் கல்யாணக் கூட்டம் மிக அழகிய ஆற்றங்கரையில் தங்கிக் காலைக் கடன்களைச் செய்தது.அப்போது சிளா பாய் ஆற்றில் தூய்மையையும் விடியலையும் ரசித்தாள்.தானும் குளித்த பின் தன் மாமிராரையும் மாமனாரையும் கவனித்த பின் தன் சாளக்ராம ஸ்வாமியை வைத்துக் கொண்டு பூஜிக்கத் தொடங்கினாள். அழகாக விஷ்ணு சஹஸ்ரநாமம் சொல்லக் கேட்டு அவள் புக்ககத்து மக்கள் வியந்திட, அவள் கணவனோ, ”என்னடி? பூஜை புனஸ்காரம்? இது எமக்கு ஒத்து வராது...” என்று கூறி சாளக்ராமத்தை ஆற்றில் வீசிவிட்டான்.

**உண்மையான ஆன்மீகவாதி**

உடனடியாக சிளா பாய் அதை எதிர்க்கவில்லை. பூர்வ ஜென்மத்தில் தான் யாரோ பூஜையை நிந்தித்ததை உணர்ந்து மனம் நொந்தாள்.அமைதியாகக் கணவனின் இல்லம் சேர்ந்தாள்.மறுநாள் காலை முதல் ஒரு மனைவியாக, மருமகளாக, ராணியாக அனைத்துக் கடமைகளையும் செய்தாள்.ஆனால் ஒரு வாய் தண்ணீர் கூட குடிக்காமல் தன்னுள் இருக்கும் பாண்டுரங்கனிடம் தன் சாளக்ராமத்தைக் காணாமல் புலம்பினாள்.

சாளக்ராமத்தில் உறையும் ஈசனே அனைத்துமாக இருப்பதை உணர்ந்த காரணத்தால் தான் சிளா பாயால் அனைவரையும், அவர்தம் செய்கைகளையும் ஏற்றுக் கொள்ள முடிந்தது.ஆனால் மூர்த்தி விசேஷமும் மரியாதையும் கருதி அவள் ஈசனிடம் வேண்டி உள்ளுக்குள் அழுதாள்.தன் ஆன்மீகம் பிறருக்கு எவ்விதத்திலும் இடைஞ்சல் ஆகக் கூடாது என்பதில் விவேகத்துடன் இருந்தாள்.ஆன்மீகத்தின் ஒரே லட்சியம் அனைவரும் ஒற்றுமையுடன் அமைதியுடனும் மகிழ்ச்சியுடன் தெய்வீகத்தில் லயிப்பது அல்லோ?

இவளது உண்ணா நோன்பையும் ஸ்திட புத்தியையும் வைராக்ய பக்தியையும் அறிந்த மாமியார் மகிழ்ந்து அவளும் வ்ரதம் இருக்க, ஏகாதசி காலையில் பூஜைப் பெட்டியுடன் அவளது சாளக்ராமம் அவள் கட்டிலில் அருகில் இருந்தது.இந்த லீலையை அரண்மனையே புகழ, இவள் கணவன் இவளது உண்மையான தெய்வீக மனதை உணர்ந்து மன்னிப்பு வேண்டினான்.அவளையே தன் குருவாக ஏற்று அவனும் பக்தி செய்தான்.இதுவல்லோ உண்மையான ஆன்மீகம்? உண்மையான இல்லறம்?

ஹரி ஓம்!